# ஈழத்து முச்சந்தி இலக்கிய மரபு – ஓர் ஆய்வு

**த. மேகராசா**
கலாநிதிப்பட்ட ஆய்வாளர்
கிழக்குப்பல்கலைக்கழகம்
இலங்கை

மலர்: 4

இதழ்: 2

மாதம்: அக்டோபர்

வருடம்: 2019

ISSN: 2454-3993

## அறிமுகம்

முச்சந்தி இலக்கியம் என்று அடையாளப்படுத்தப்படுவது வாய்மொழி இலக்கிய மரபுக்கும் எழுத்து இலக்கிய மரபுக்கும் இடைப்பட்ட புதுவகையான ஓர் இலக்கிய மரபாகும். வாய்மொழிப்பாடல்கள் ஆசிரியர் அற்றனவாகவும் பொதுமைப் படுத்தப்பட்டனவாகவும் காணப்படும். ஆனால் மேற்குறித்த புதுவகையான இலக்கிய மரபுக்கு ஆசிரியர் உண்டு. அத்துடன் இவை கையேட்டுப்பிரதியாகஎழுதப்பட்டனவாகவும்அச்சுருவாக்கப்பட்டு பிரசுரங்களாக விற்பனை செய்யப்படுவனவாகவும் உள்ளன. இவை மக்களை நோக்காகக்கொண்டு மக்கள் கூடுகின்ற சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் பாடப்பட்டு வந்துள்ளன. இத்தகைய இலக்கிய மரபுசார்ந்த புலவர்களை மக்கள் பாட்டுக் கட்டும் புலவர்கள் என்றும் அழைத்துவந்துள்ளனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி இத்தகைய பாடல் மரபினை “ஓரளவு வாய்மொழிப்பாடல்கள்” அல்லது “பாதிவாய் மொழிப்பாடல்கள்” என்றும் “எழுத்துநிலை பெற்றுள்ள வாய்மொழிப்பாடல்” என்றும் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் செ. யோகராசா இவ்வகையான ஈழத்து வாய்மொழிப்பாடல்கள் குறிப்பிடத்தக்கவற்றைத் தொகுத்து ஈழத்துவாய் மொழிப்பாடல் மரபு (2002) என்ற நூலாக வெளியிட்டுள்ளதுடன் இவ்விலக்கிய மரபினை “முச்சந்தி இலக்கியம்” என்றும் துணிவுடன் வலியுறுத்தி “ஈழத்து முச்சந்தி இலக்கியம்” (2014) என்ற நூலினையும் வெளியிட்டுள்ளார். கலாநிதி சி. சந்திர சேகரம் “கிழக்கிலங்கை வாய்மொழிப்பாடல் மரபு” என்ற தலைப்பில் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அத்துடன் குறிப்பிட்ட பாடல்களையும் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். இவர்களைத் தவிர பேராசிரியர்களான மௌன குருசித்திரலேகா, எஸ். சிவலிங்கராசா மற்றும் கலாநிதி சி. ஜெயசங்கர் ஆகியோரும் இத்துறை சார்ந்து ஈழத்தில் கவனம் செலுத்திவருகின்றனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்தகையபாடல்கள்தொகுப்புக்களாகவும் பிரசுரங்களாகவும் வெளிவந்துள்ளன. ஆ.இரா.வேங்கடாசலபதி முக்கியமானவர். இவர் இவ்விலக்கிய மரபினை "முச்சந்தி இலக்கியம்" என்றே கையாண்டுள்ளார். இவரது "முச்சந்தி இலக்கியம்" என்ற நூல் முக்கியமானதாகும். நாட்டார் பாடல்கள், கூத்துப்பாடல்கள், சடங்கு மரபுகள், விவசாய பண்பாட்டுச் சூழல் முதலானவை இப்பாடல் மரபின் நிலைபேற்றுக்கு ஆதாரமாகவுள்ளன. இக்கட்டுரை ஈழத்து முச்சந்தி இலக்கியமரபினையும் அம்மரபு வெளிப்படுத்தும் விடயங்களையும் எடுத்துக் கூறுவதை நோக்காகக் கொண்டுள்ளது.

## இயற்கை அனர்த்தங்கள்

சூறாவளி, வெள்ளம் முதலான இயற்கை அனர்த்தங்களைப் பற்றி முச்சந்தி இலக்கியப் புலவர்கள் பாடல்களைப் பாடி அவற்றைச் வரலாற்றுப் பதிவுகளாக்கியுள்ளனர். அக்கரைப்பற்றைச் சேர்ந்த சேகுமதார் (1853 - 1940) பாடிய "புயல் காவிய'மே இவ்விலக்கிய மரபு சார்ந்து ஈழத்திலெழுந்த இயற்கை அனர்த்தம் பற்றிய முதற்காவியமெனப் பேராசிரியர் செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார். 1957 இல் ஏற்பட்ட வெள்ளம் அனர்த்தம் பற்றி மா.கேதாரபிள்ளை (வெள்ளக்காவியம்), த.சுப்பிரமணியம்(பெருவெள்ளத்தம் மானை),ஆகியோர் பாடியுள்ளனர். இவ்வெள்ளத்தினால் உயிர்ச் சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்டன. கேதார பிள்ளை பாடிய வெள்ளக் காவியத்தில் வரும் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்ற.

**"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திஏழில்
ஆளுகின்றபன்னிரண்டு இருபத்திஐந்தில்
ஆனதொருநாள் புதன் கிழமை இரவு
அடித்த புயல் வெள்ளப்பெருக்கால்
அழிவானதையோ
அழிவானபொருளைத் தெளிவாகஉரைப்பேன்.
ஆறுமணிநேரமதில் வெள்ளமதுபெருகி
ஆளுமனைமீதினில் உள்ளேபுகுந்து
ஆட்களைக் கலக்கியேபிள்ளைகளைஅள்ளியே
அழுதழுதுதெருமுழுதும்
ஓடினாரையோ'' (1957)**

1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளி பற்றியும் முச்சந்தி இலக்கியப் புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். மா.பொன்னனின் "சூறாவளித் துயர் அம்மானை", மா.சிதம்பரப்பிள்ளையின் "புயல்காவியம்", கேதாரபிள்ளையின் "சூறாவளிக் காவியம்", கவிக்குயில் சிவஞானத்தின் "சூறாவளியில் சுப்பன்" மற்றும் தம்பாலைவாசியான முகமது லெவ்வையின் "சூறாவளி காவியம்" முதலான படைப்புக்கள் முக்கியமானவை. இவை சூறாவளியின் தன்மை, அது தாக்கிய ஊர்கள், அதனால் ஏற்பட்ட இழப்புக்கள், கொடுக்கப்பட்ட நிவாரணங்கள், மோசடிகள் முதலான பலவிடயங்களை தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இப்பாடல்களினூடாக உள்ளூர் மக்களின் சூழலியல் வாழ்க்கை பதிவு செய்யப் பட்டுள்ளன. இவ்வகையில் இப்பாடல்கள் முக்கியமானவையாகும்.

## ஊர் நிகழ்வுகள்

தமது ஊரில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றியும்பிரதேசவிடயங்கள்பற்றியும்பாட் டுக்கட்டிப்பாடும் ஆற்றல் மிக்கவர்களாக முச்சந்திப்புலவர்கள் விளங்கியுள்ளனர். மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டபோது அவற்றை வரவேற்று உள்ளூர்ப் புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். கற்சேனையைச் சேர்ந்த மாரிமுத்துப் புலவர் கும்மிப்பாடல் மெட்டில் பாடியுள்ள பாடல்கள் கவனிப்புக்குரியவையாகும்.

**இங்கிலிஸ் வெள்ளையர்கள் வந்தார்கள் -இங்கே**
**ஏழைக் குடியேற்றம் பார்த்தார்கள்**
**ஏழைகள் தங்களைக்கண்டாராம் - அவர்**
**ஆனந்தம் கொண்டாராம் பாருங்கடி**
**காணி நெல் மண்வெட்டி தான் கொடுத்தார் ஐயா**
**கனத்த பயிர்களும்தான் கொடுத்தார்**
**ஏழைகளைப்பார்க்க நோர்வே ஐயா வந்தார்**
**எழுந்து கும்மியடியுங்கடி (கையெழுத்துப்பிரதி)**

கேதாரபிள்ளை பாடிய இறால்வளர்ப்பு அம்மானையும் பிரதேச நிகழ்வு பற்றியதாகவே அமைந்துள்ளது. இவ் அம்மானை "இறால் வளர்ப்பு வன்செயல்" பற்றியதாக உள்ளது. இறால் வளர்ப்புப் பண்ணையில் வேலை புரிந்த பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையை இவரது பாடல் குறிப்பிடுகின்றது. இப்படுகொலை (கொக்கட்டிச்சோலைப் படுகொலை) உலக அளவில் அறியப்பட்டதொன்றாகும். இது பற்றி வேறு யாரும் பாடாத நிலையில் உள்ர்ப்புலவரான இவரது பாடல் கவனிப்புக்குரியதாகவுள்ளது.

**மட்டக்களப்பு மண்முனை பற்றியே காண்**
**ஏழை வறுமை எங்கும் பிரச்சினையாம்**
**தொழிலே இல்லை தோழர்கள் வாழ்வதற்கு**
**வேலை இல்லாத்திண்டாட்டம் வெகு பிரச்சினை**
**பசியால் வாடியும் பிள்ளைகள் தான் இருந்து**
**ஏங்கி உக்கி இறந்தார்கொஞ்சப்பேர்.**
**நல்ல சாப்பாடு இல்லை நாட்டிலே அம்மானை**
**பஞ்சம் பசி தீர்த்து பழைய நாடு திருத்த**
**வந்த இறால் வளர்ப்பு கொம்பனி..**
**..**
**காட்டை அழிப்பது போல் கொம்பனி**
**அழிஞ்சி தரைமட்டம் ஆக்குகிறார்.**
**எந்தச் சவமும் போடவில்லைகாண்**
**எண்பத்தி அயிந்து பேர் கொம்பனியில்**
**சுட்ட சவம் கொண்டே போய்**
**ஒரு மெசின் பெட்டி ஏத்தியே காண்**
**துலைச்சான் கொம்பனியைத் துரோகி**
**அழிச்சான் காண் அடியோடு அம்மானை**
**(கையெழுத்துப்பிரதி)**

தான் நேரில் கண்ட உண்மைச் சம்பவங்களையே தனக்குள் அடக்கி வைக்கமுடியாது மேற்குறித்த புலவர் அம்மானையாகப் பாடியுள்ளார். எனினும் அரசியல் சூழல் காரணமாக அவர் இதனைப் பதிப்பிக்கவில்லை. கையெழுத்துப்பிரதியேகள ஆய்வில் கிடைக்கப்பெற்றது.

**அரசியல் நோக்கு**

ஈழத்துக்கவிஞர்களிடம் அரசியல் குறித்த நோக்கு தெளிவாக வெளிப்படுவதற்கு முன்னரே முச்சந்தி இலக்கியப் புலவர்களிடம் இத்தகைய அரசியல் பார்வை வெளிப்பட்டு நிற்பதை அவதானிக்கலாம். "நவீன கவிஞர்களிடம் அரசியல் ஈடுபாடு என்பது சுதந்திரத்திற்குப் பின்னர் மொழியுணர்ச்சி சார்ந்து முகிழ்க்க ஆரம்பித்தது. முற்பட்ட நிலையில் அது பற்றிய அக்கறை குன்றியிருந்தது. இத்தகைய இலக்கியச் சூழலில் ஐம்பதுக்கு முற்பட்ட இவ்வாய்மொழிப் புலவர்களிடம் அரசியல் விவகாரங்களில் அக்கறை - அதுவும் விமர்சன நோக்குடைய அக்கறை காணப்பட்டமை வியப்புக்குரியதே (செ.யோகராசா,2013:21) முகம்மது ஹாஜியார் என்ற முச்சந்தி இலக்கிய மரபுவழிப் புலவர் ஐம்பதுகள் காலப்பகுதியில் ஈழத்து அரசியல் நிலையை அடிப்படையாக வைத்து "சுதந்திரப்பா" என்ற தலைப்பில் பாடல் பாடியுள்ளார். அதில் வரும் பின்வரும் பகுதி நோக்கத்தக் கதாகும்:

**இன்னும் என்ன செய்யப்போறாங்கோ**
**சுதந்திரம் தன்னை என்ன முறையில் நடத்தப் போறாங்கோ**
**வட்டமேசை கூடியாச்சு**
**வந்தே மாதரம் பாடியாச்சு**
**இஸ்டமுடன் இலங்கை நகர்க்கு**
**சுதந்திரமும் கிடைத்துப் போச்சு (2013:21)**

அரசியலில் செல்வாக்குப் பெற்று மக்கள் மனதில் இடம் பிடித்த தலைவர்கள் பற்றியும் இத்தகைய புலவர்கள்

பாடல்களைப் பாடியுள்ளனர். இலங்கைப் பாராளுமன்றத்தில் அமைச்சராகவிருந்த எம்.எஸ்.எம்.அரப் விமான விபத்தில் இறந்தபோது மருதமுனையைச் சேர்ந்த அ.றஹ்மத்தும்மா பாடிய அசுரப் ஒப்பாரி கவனிப்புக்குரியதாகும்.

**சந்தன மரத்த தாழியாலும் நாட்டாம**
**பாளிமன்றில் நாட்டி வைத்தோம் அல்லா**
**பறித்தெடுத்துப் போட்டயடா**
**தங்கம்போல் மேனி தளதளத்த கண்ணொளிவு**
**முத்துப்போல் பல்லு அவர்ர முகத்தொளிவ**
**நாங்க காணுரெப்போ?**
**முஸ்லிம் என்னும் கட்சி முன்னேற வேணுமெண்டு**
**உன்னுடன் சேர்ந்து நடந்து வந்த எங்கிட**
**தலைவர் எங்கே சந்திரிக்கா (2000:70-72)**

இவ்வாறு ஈரடியில் அமைந்த நூறு பாடல்களை இப்புலவர் பாடி, அவரது மன ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

## மது ஒழிப்பு

சமூக சீரழிவுக்கும் சாதாரண மக்களின் பொருளாதார நலிவுக்கும் மதுபாவனை முக்கியமான காரணியாகும். இந்நிலையில் மதுபாவனை ஒழிய வேண்டும் என்ற உணர்வு சமூக நோக்குடைய முச்சந்தி இலக்கியப் புலவர்களுக்கு ஏற்படுவதென்பது இயல்பானதாகும். பழுகாமத்தைச் சேர்ந்த இராசம்மாவின் "கெட்டகுடி", பதுளையைச் சேர்ந்த கே.கே.எஸ்.ஜில்லின் "குடியைக் கெடுத்த குடிகாரன் பாட்டு" முதலானவை முக்கியமானவையாகும். மதுவினால் ஏற்படும் பாதிப்பினைப் பின்வருமாறு பாடியுள்ளார் இராசம்மா:

**குடியினால் கெட்டவர்கள் கோடிகளுண்டு**
**குடும்பத்தையே பாராமல் குடிப்பவருண்டு**
**மதுவினால் வரும் தீங்கால் வாடுவதுண்டு**
**வாடி மனம் நொந்து சிலர் மடிவதுமுண்டு**
**பேரறிஞனாக வாழ்ந்து பெருமையுமில்லை.**
**பெற்றபிள்ளைபெண்சாதியும்மதிப்பதில்லையே.**
**(கையெழுத்துப்பிரதி)**

## தொழிலாளர் நலன்

உழைக்கும் மக்கள் படும் துயர் பற்றிய பாடல்களை முச்சந்தி இலக்கியப் புலவர்கள் சிறந்த முறையில் பாடியுள்ளனர். இலங்கையில் மலையக மக்களது வாழ்வு, மிகத்துயர் மிக்கது. தேசிய வருமானத்திற்குக் கூடுதல் பங்களிப்புச் செய்கின்றபோதிலும் அவர்களுக்கு வீடு, சுகாதார, கல்வி, தொழில் சார்ந்த வசதி வாய்ப்புக்கள் சிறந்தமுறையில் வழங்கப்படவில்லை. காசி.ரெங்கநாதன், எஸ்.பெரியக்காள், எம்.வீ.பழனிபாண்டி முதலான மலையகப் புலவர்கள் பாடிய பாடல்கள் பற்றி பேராசிரியர் செ.யோகராசா ஆய்விலே குறிப்பிட்டுள்ளார். இங்குக் காசி.ரெங்கநாதனின் பாடலில் வரும் ஒரு பகுதி தரப்படுகின்றது:

**பட்ட கடன் கடைகடைக்குச் சும்மா கிடக்கிது - அந்த**
**பாக்கிகாரன்க பேசுற பேச்சு வெக்கமாக்கிடக்குது**
**சாமிக்குப்போட்ட உண்டியலுந்தான் தடவி முடிஞ்சுது - இந்த**
**தாண்டவமாடின வீடுதான் எப்படி விருத்தியாதுமது**
**(2013:48)**

இதனைப்போன்று மட்டக்களப்பைச் சேர்ந்த சின்னவப்புலவர், இராசம்மா முதலானோரும் தொழிலாளர் படும் துன்பத்தைப் பாடியுள்ளனர்.

## சொந்த அனுபவங்கள்

சிறைச்சாலை வாழ்வு உள்ளிட்ட சொந்த அனுபவங்களையும் முச்சந்தியிலக்கியப் புலவர்கள் பாடியுள்ளனர். கேதாரபிள்ளை என்ற உள்ளூர்ப்புலவர் சிறையில் இருந்து துன்பங்களை அனுபவித்து, பின்னர் மீண்டுவந்தவர். அவர் சிறையனுபவத்தினை "தென்கதிரை முருகன் பேரில் சிறை மீட்ட கும்மி" பாடியுள்ளார். இவர் "சின்னக்குளத்து காளியம்மன் சிறை மீட்ட காவியம் என்ற நூலில்

**கேதாரபிள்ளை யெனைக் கெதியாக மீட்பாய்**
**கேவலம் பண்ணுகிறார் கண்டிநகர்ச்சிறையில்**
**பார்ப்போர்க்கு பகிடியாய் இருக்குதே அம்மா**
**பாழாகிப்போகுதே எந்தனது வாழ்க்கை.**

**வீரியர் பணத்தினால் செய்ததொரு வேலை**
**வினையாகிப் போச்சுதே வீரமா காளி**
**வாலையே சிறையிலெனை மீட்டருளும் தேவி**
**வடபத்திரகாளியே சின்னக்குளத்தாயே''**

என்றவாறு சிறை வாழ்வு பற்றிப் பாடியுள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கதாகும். முச்சந்தி இலக்கியப் புலவர்கள் பாடிய "கவிகளில்" தனிமனித அகவுணர்வுகள், ஆற்றாமைகள் ஒழிவு மறைவின்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

## யுத்தகால வாழ்வு

யுத்தகால அவலங்கள் பற்றி முச்சந்தி இலக்கியப்புலவர்கள் பல பாடல்களைப் பாடியுள்ளனர். எனினும் போர்க்கால இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளில் இத்தகைய உள்ளூர் முச்சந்திப் புலவர்களின் பாடல்கள் பெரும்பாலும் ஆய்வாளர்களால் எடுத்தாளப்படவில்லை. த.கதிர்காமத்தம்பியின் "செல்வெடி" (1999), "கப்பல் அடி" (2007), "அகதி" (2007) மற்றும் மு.இ.அஹமதுலெவ்வையின் "அகதிகள் ஒப்பாரி" (1997), ஏ.கந்தசாமியின் "வுக்கர்" (1999), மா.கேதாரபிள்ளையின் "தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப்பிள்ளையார் தோத்திரம்" (2007) முதலானபடைப்புக்கள் முக்கியமானவையாகும். இவை யுத்தகால அழிவுகளைப் பதிவுகளாக்கியுள்ளன.

**"முற்றாக மக்களை அழித்தால் நாட்டிலே**
**மூர்த்தியே உனை வணங்க ஆரும் உண்டோ**
**செல்வெடி ஓசையினால் மக்கள் தானும்**
**சிதறியே ஓடுகிறார் ஊரை விட்டே**
**லட்சக்கணக்கில் மக்கள் அகதி பாரும்**
**நிம்மதி இல்லை தவிக்கிறோம் ஐயா**
**மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்**
**சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே**
**(கேதாரபிள்ளை, 2007)**

இறைவனை நோக்கி பாடும் பாணியில் யுத்தகால கொடுமைகளை இத்தகைய புலவர்கள் பாடியுள்ளனர். இவைதவிர இத்தகைய புலவர்கள் கோயில் வரலாறு, வழிபாட்டு முறைகள், பக்தி உணர்வு முதலான பொருண்மைகளில் பாடல்களை இயற்றியுள்ளனர்.

## முடிவுரை

காலனிய ஆதிக்கம் உள்ளூர் இலக்கிய மரபுகளைச் சிதைத்ததோடு மேலைத்தேயமே சிறந்ததென்ற மனநிலையைப் பலமாக ஏற்படுத்தியது. இதனால் உள்ளூர் கலை, இலக்கிய, பண்பாட்டு மரபுகள் கவனிக்கப் படாமற்போயின. நவீனத்துவ மோகம் இத்தகைய உள்ளூர் மரபுகளை இழிவாகக் கருதும் அல்லது ஒதுக்கும் மனநிலையினையே கீழைத்தேய நாடுகளில் கட்டியெழுப்பியது. காலனியவாதிகள் இதனால் வெற்றியும் கண்டார்கள். காலனியாதிக்கத்தால் கவனிக்கப் படாமலாக்கப்பட்ட இலக்கிய மரபுகளுள் முச்சந்தி இலக்கியம் முக்கியமானதாகும். இது உள்ளூர் அறிவுச் சமூகத்தின் உற்பத்தியாகும். உள்ளூர் சமூக, அரசியல் வரலாற்றை, பண்பாட்டு அம்சங்களைப் பற்றியனவாக அமைந்த இவ்விலக்கிய மரபுப் பாடல்கள் இலங்கையில் பல வெளிவந்துள்ளன. பல கையெழுத்துப் பிரதிகளாகவிருந்து அழிந்து போயின. கவனிக்கப்பட்டாத பல விடயங்களை துணிச்சலுடன் வெளிப்படுத்துவனவாகவும் சொல்லவந்த விடயத்தினை மிகவும் அழுத்தமாக எடுத்துரைப்பனவாகவும் அமைந்த முச்சந்தி இலக்கிய மரபு பற்றிய தேடலும் ஆவணப்படுத்தலும் அது பற்றிய ஆய்வுகளும் இன்றைய நிலையில் அவசியமானவையாகும்.

## உசாத்துணை நூல்கள்

1. சந்திரசேகரம்,சி., கலாநிதி, (2017), கிழக்கிலங்கை வாய்மொழிப்பாடல் மரபு, இலங்கை: குமரன் புத்தக இல்லம்
2. யோகராசா, செ., பேராசிரியர், (2013), ஈழத்து முச்சந்தி இலக்கியம், மட்டக்களப்பு: மகுடம் பப்ளிகேசுன்

3. வேங்கடாசலபதி, ஆ., இரா., டாக்டர், (2004), முச்சந்தி இலக்கியம், நாகர்கோவில்: காலச்சுவடு
4. கையெழுத்துப்பிரதிகள்
5. கேதாரபிள்ளை,ந.,மா., (1989),இறால் வளர்ப்பு அம்மானை, மட்டக்களப்பு: முனைக்காடு.
6. (1994), சின்னக்குளத்து காளியம்மன் சிறை மீட்ட காவியம்,மட்டக்களப்பு: முனைக்காடு.
7. சிவஞானம், கவிக்குயில், (1978), சூறாவளியில் சுப்பன், மட்டக்களப்பு: முனைக்காடு
8. இராசம்மா, (1995), மது ஒழிப்பு, மட்டக்களப்பு: பழுகாமம்
9. மாரிமுத்து (1991), ரெட்பாணா வீட்டுத்திட்ட அம்மானை, மட்டக்களப்பு: கற்சேனை.